**இலங்கை மாநாட்டுப் பணியகம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் (‘‘பணியகம்’’) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பணியகம்

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பணியகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பணியகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பணியகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பணியகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பணியகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறைச் சட்டத்தின் VIII ஆம் அத்தியாயத்தின் 42 ஆம் பந்தியின் (ஆ), (உ) மற்றும் (ஏ) உபபிரிவு | சுற்றுலாத் துறையில் ஒரு இடமாக இலங்கையின் சந்தைப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட பொதுவான கொள்கையொன்றை வழங்குதல், மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் போன்றவற்றைக் கையாள்வதில் ஈடுபட்டுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு தொழில்சார் நியமங்களை பரிந்துரைத்தல் மற்றும் | சுற்றுலாத் துறைக்காக பணியகத்தினால் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொழில்சார் நியமங்களை நிறுவுவது தொடர்பில் செயற்படும்.<br><br>SLCB இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், SLCB ஆராய்ச்சிப் பிரிவினால் MICE | சுற்றுலாத் துறையில் ஒரு இடமாக இலங்கையின் சந்தைப்படுத்தலை உறுதிப்படுத்த மற்றும் மாநாடுகளை நடாத்துதல், கூட்டங்களை நடாத்துதல், கண்காட்சிகளை ஒழுங்கமைத்தல் போன்றவற்றில் ஈடுபடும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இலங்கையை ஒரு சுற்றுலாத் தலமாக மேம்படுத்துவதற்கு ஊக்குவிப்பு பணியகத்திற்கு வழிகாட்டலை வழங்குதல் ஆகிய பணியகத்தின் நோக்கங்கள் மீளாய்வாண்டு வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பிரிவிற்காக பயிற்சிப் நிகழ்ச்சித்திட்டத்திற்கு SLCB MICE இல் ஒருநாள் செயலமர்வொன்றாக BMICH இல் நடாத்தப்பட்டதுடன், அதனது மீள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் 2022 செப்தம்பர் 15 ஆந் திகதி வட பிராந்தியத்தில் ஒருநாள் செயலமர்வாக யாழ்ப்பாணம் திண்ணாய் ஹோட்டலில் நடாத்தப்பட்டது. | நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்காக தொழில்சார் நியமங்களை உருவாக்குதல் மற்றும் இலங்கையை சுற்றுலாத் தளமொன்றாக மேம்படுத்துவதற்கு மேம்படுத்தல் முகவரகத்திற்கு உரிய வழிகாட்டல்களை வழங்குதல் போன்றவற்றுக்கு பொதுவான கொள்கையொன்று திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II இன் பந்தி இலக்கம் 11 | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் திறைசேரி அங்கீகாரங்களின்றி ரூபா 118,000,000 குறுங்கால முதலீடு மற்றும் ரூபா 32,000,000 நீண்ட கால முதலீடு என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தன. | குறுங்கால மற்றும் நீண்டகால முதலீடுகளுக்காக அங்கீகாரத்திற்கான கோரிக்கை ஏற்கனவே திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. | திறைசேரியின் அங்கீகாரத்தினை முன்கூட்டியே பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2015 மார்ச் 26 ஆந் திகதியிடப்பட்ட 07/2015 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் செலுத்தக்கூடிய உச்ச முற்பணத் தொகையானது ரூபா 10,000 ஆகம். எவ்வாறான போதிலும், அமைச்சின் செயலாளர் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த தொகையானது ரூபா 25,000 வரை உயர்த்தப்பட்டிருந்தது.<br><br>எனவே, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது 14 ஊழியர்களுக்கு தலா ரூபா 25,000 படியாக ரூபா 700,000 கூட்டுத்தொகை விழா முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. விலகிச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 150,000 மீள பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், | 2022 திசெம்பர் 22 ஆந் திகதி பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது திறைசேரியின் பிரதிநிதியால் 13/12/2022 ஆந் திகதி சுற்றுலா மற்றும் காணிகள் அமைச்சின் செயலாளரினால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது தமிழ் மற்றும் சிங்களப் புதுவருட விசேட கொடுப்பனவை மேற்கொள்ளல் தொடர்பில் திறைசேரியின் அங்கீகாரமின்றி அனுப்பப்பட்ட கடிதமொன்று முன்வைக்கப்பட்டது. 2021 மற்றும் 2022 | உரிய அங்கீகாரமின்றி மேலதிக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட கூடாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும், ரூபா 550,000 தொகையானது அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆம் ஆண்டுகளுக்கான சிங்கள மற்றும் தமிழ் புதுவருடத்திற்காக செலுத்தப்பட்ட விசேட படியானது திறைசேரியின கட்டளைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் பதவியணியினரிடமிருந்து அறவிடுமாறு நீண்ட காலம் கலந்துரையாடப்பட்டது. மீள அறவீட்டு நடைமுறை 2023 சனவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், பொருளாதார பின்னடைவை கருத்திற்கொண்டு மேற்கூறிய தொகையை 20 சமனான தவணைகளில் அறவிடுவதற்கு முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டது. | |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான (SOE) செயல்வழிக் கோவையின்<br>(i) 3.2 (i) ஆம் பந்தி | நிறுவனத்தின் போக்குவரத்துப் படியாக செலுத்தப்படும் ரூபா 4,000 படியான கொடுப்பனவிற்கு மேலதிகமாக கொடுப்பனவொன்று 2022 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் வரிசை அமைச்சின் பரிந்துரையுடன் திறைசேரியின் அங்கீகாரமின்றி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மேலதிக கொடுப்பனவாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 126,000 ஆகும். | சுற்றுலா மற்றும் காணிகள் அமைச்சரான மதிப்பிற்குரிய. ஹரீன் பெர்னான்டோ அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவுரைகளுக்கமைய 23.09.2022 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச்சட்டத்தின் 15(2)(ஆ) பிரிவின் பிரகாரம், சுற்றுலா அமைச்சராக அவருக்கு சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் சுற்றுலாத் துறையின் பதவியணியினருக்கு உரிய போக்குவரத்துப் படிகளை ரூபா 4,000 இல் இருந்து ரூபா 10,000 வரை | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம், பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி படிகள் செலுத்தப்படக் கூடாது. |

அதிகரிக்குமாறு குறிப்பிட்டு 2022 ஒக்தோபர் 27 ஆந் திகதிய அமைச்சரவை கூட்டத்தில் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. திறைசேரியின் பிரதிநிதி நீங்கலாக ஏனைய அனைத்து பணிப்பாளர் சபை அங்கத்தவர்களும் தகவல் பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தனர். சபையின் அங்கீகாரத்தின் பின்னர் போக்குவரத்து கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 95,382,436 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகையானது ரூபா 13,133,911 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 82,248,525 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. பொதியேற்றல் தீர்வை வருமானம் ரூபா 84,555,293 இனால் அதிகரித்தமை மற்றும் அழைப்பு வைப்பு வட்டியானது ரூபா 17,386,202 இனால் அதிகரித்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வுப் பிரச்சினை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 24 ஆந் திகதி பராமரிப்பு பணிகளுக்காக நிறுவனமொன்றுக்கு அனுப்பப்பட்ட வாகனமொன்று, குறித்த பராமரிப்பு பணிகள் நிறைவடைந்து சுமார் 1 வருடம் 03 மாதங்கள் கடந்த நிலையில் மீள கிடைக்கப்பெற்றது. எவ்வாறான போதிலும், மேலதிக குறைபாடுகள் காரணமாக குறித்த வாகனத்தை பராமரிப்பு பணிகளுக்காக மீள அனுப்ப வேண்டியதாக காணப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டின் போது பட்டியலிடப்பட்ட பெறுமதியான ரூபா 1,179,686 தொகையில் 75 சதவீதத்தினை செலுத்துவதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருந்தது. | SLCB இன் தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் பழுதுபார்க்கும் நிலையத்திற்கு (லக்திவ இன்ஜினியரிங்) பல தடவைகள் சென்றிருந்ததுடன், பழுதுபார்த்தலை நிறைவு செய்வதற்கு சுமார் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. குறித்த வாகனம் 2023 பெப்ரவரி 01 ஆந் திகதியளவில் SLCB இற்கு மீள வழங்கப்பட்டது. மொத்த பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 1,179,686 ஆகும். லக்திவ என்ஜினியரின் இனால் வாகனத்தை விடுவிப்பதற்காக முழுமையான கொடுப்பனவு வலியுறுத்தப்பட்டது. எவ்வாறான போதிலும், SLCB இனால் | வாகன பராமரிப்பு பணிகள் செயற்திறனாகவும் விளைதிறனாகவும் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், கொடுப்பனவு மேற்கொள்வதற்கு முன்னர் செய்து முடிக்கப்பட்ட பணி தொடர்பில் திருப்திகொள்ள வேண்டும். |

| | | |
| --- | --- | --- |
| | மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் அடிப்படையில் 75% ஆன கொடுப்பனவு எஞ்சிய 30 நாட்களினுள் செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது. வாகனம் கொண்டு செல்லும் நிலையில் உள்ளதாக பல தடவைகள் SLCB இற்கு அறிவிக்கப்பட்டது. SLCB சமூகமளித்த எல்லா சந்தர்ப்பத்திலும் குறைபாடுகள் இனங்காணப்பட்டு அதனை நிவர்த்தி செய்தல் தொடர்பில் வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டது. இறுதியாக லக்திவ இன்ஜினியரிங் கம்பனியால் வாகனத்தை கொண்டு செல்லுமாறு வலியுறுத்தப்பட்டது. குறித்த விடயம் தொடர்பில் சுற்றுலா அமைச்சின் செயலாளரின் அறிவுரைளை பெற்றுக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதுடன், இதுவரையிலும் எஞ்சிய கொடுப்பனவு செலுத்தப்படவில்லை. குறித்த 25% இனை செலுத்துவது தொடர்பில் செயலாளரின் கட்டளை பெற்றுக்கொள்ளப்பட வேண்டியுள்ள போது, லக்திவ இன்ஜினியரிங் கம்பனியால் எஞ்சிய தொகையை உடனடியாக செலுத்துமாறு வலியுறுத்தப்பட்டது. | |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வுப் பிரச்சினை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| MICE மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் - வங்காளதேசம் 2022 ஏப்ரல் 26 ஆந் திகதி நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், உண்மையாக 4 மாதங்களின் பின்னர் 2022 செப்தம்பர் 01 ஆந் திகதியே நடாத்தப்பட்டது. ரூபா 3,778,622 ஆன கிரயத்தில் குறித்த நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டிருந்தது. எனினும், எதிர்பார்த்த 80 சுற்றுலா உத்தியோகத்தர்களின் வருகையானது திருப்திகரமான | நாட்டில் நிலவிய நிலைமை காரணமாக நிகழ்ச்சி காலந்தாழ்த்தப்பட்டது. நாடு முகங்கொடுத்துள்ள அந்நிய செலாவணி பிரச்சினையை கருத்திற்கொண்டு இலங்கை உயர் ஸ்தானிகரகத்தில் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யுமாறு முகாமைத்துவ சபையினால் அறிவுரை வழங்கப்பட்டது. SLCB இனால் மக்கள் தொடர்பு கம்பனியின் தொடர்புடன் ஹோட்டலொன்றில் திட்டமிடப்பட்டவாறு | SLCB இனால் நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் எதிர்பார்த்த பெறுபேறுகளை திருப்திகரமான மட்டத்தில் அடைந்துகொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மட்டத்தில் மட்டத்தில் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், டாக்காவின் இலங்கைத் தூதரகத்தினால் அழைப்பு விடுக்கப்பட்ட MICE தொழிற்துறையின் 90 தரப்பினர் மற்றும் 30 ஊடகவியளாலர்களிடையே 53 சுற்றுலா முகவர்கள் மற்றும் 14 ஊடகவியலாளர்கள் மாத்திரம் பங்குபற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதுமாத்திரமன்றி, நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்ட வளாகத்தின் இடப் பற்றாக்குறை, இணையத்தள வசதிகள் காணப்படாமை, மின்சாரத் தடை ஆகிய பிரச்சினைகள் காரணமாக நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்த்த பெறுபேற்றினை மகிழ்ச்சிகரமான மட்டத்தில் அடைந்துகொள்ள முடியவில்லை என்பது இனங்காணப்பட்டது. | நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டால் ளுடுஊடீ இற்கு தேவையான எண்ணிக்கையை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும். பிந்தைய நிகழ்வு அறிக்கையில் முகங்கொடுத்த பிரச்சினைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அவை முகாமைத்துவ சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்குரிய பரிந்துரைகளை SLCB முன்வைத்தது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வுப் பிரச்சினை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகளுக்கான செயல்வழிக் கையேட்டின் (SOE) 3.4 ஆம் பந்திக்கமைய அனைத்து பொது முயற்சிகளுக்கும் பதிலீட்டு திட்டமொன்று காணப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், பணியகத்தினால் இதுவரையிலும் பதிலீட்டு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது SLCB இற்கு பதிலீட்டு திட்டமொன்று காணப்படாத போதிலும், SLCB இனால் பதிலீட்டு திட்டமொன்றை தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பணியகத்திற்காக பதிலீட்டு திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வுப் பிரச்சினை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டியின் | SLCB இனால் அடுத்துவரும் ஐந்து வருடங்களுக்கான மூலோபாயத் திட்டத்தை | ஐந்து வருடங்களுக்கு மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| 2.3 ஆம் பந்திக்கமைய, ஐந்து வருடங்களுக்கு மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டு திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும், வியாபார மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு வருடமும் திட்டம் நாளதுவரையாக்கப்பட வேண்டியதுடன், அதற்கடுத்த வருடம் ஆரம்பிப்பதற்க 15 நாட்களுக்கு முன்னர் பொது திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறான போதிலும் பணியகத்திற்கான மூலோபாயத் திட்டமொன்று 2020-2023 எனும் நான்கு வருட காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்ததுடன், இது இதுவரையிலும் நாளதுவரையாக்கப்படவில்லை. | தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், வியாபார மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு வருடமும் திட்டம் நாளதுவரையாக்கப்படும். | என்பதுடன், ஒவ்வொரு வருடமும் நாளதுவரையாக்கப்பட்டு திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| **கணக்காய்வுப் பிரச்சினை** | **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகளுக்கான கூட்டிணைந்த நல்லாளுகை வழிகாட்டிக் கோவையின் 4.4 ஆம் பந்திகளின் பிரகாரம், எந்தவொரு பொது முயற்சியினதும் கணக்காய்வுக் குழுவின் ஊடாக சபைக்கு அறிக்கையிடும் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் காணப்பட வேண்டும். எவ்வாறான போதிலும், பணியகத்தின் உதவி முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வாளர் பதவியானது 2022 செப்தம்பர் 09 ஆந் திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | வெற்றிடமான பதவியை நிரப்புவதற்கு உரிய சபையின் அங்கீகாரம் தற்போது கோரப்பட்டுள்ளது. சுற்றுலா அமைச்சிடமிருந்து கிடைத்த அறிவுரைக்கமைய அரச ஆட்சேர்ப்புகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதுடன், குறித்த அரச நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை நீக்கப்படும் வரையிலும் உள்ளக பணியாளர் ஒருவரினால் உதவி முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வாளர் பதவியை மேவுகை அடிப்படையில் மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. குறித்த தடை நீக்கப்பட்டதும் உடனடியாக ஆட்சேர்ப்பு நடைமுறை ஆரம்பிக்கப்படும். | பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |